1981 பிப்ரவரி 10]

வெட்டி திருத்திய மேற்படி ஒதுக்கக் காட்டுப் பகுதியில் இது வரை 104.6 எக்டேர் பரப்பில் அச்சன் (Achan) செம்மரம் (Red Sanders) புளி மற்றும் கருவேல கன்றுகள் நடப்பட்டுள்ளன. மீதமுள்ள பரப்பும் 1980–81-ல் அதே மர வகையினை நடும் பொருட்டு எடுத்துக் கொள்ளப் படுகிறது.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணன் மேடை காட்டில் முட்புதர்கள் வெட்டப் பட்டு, பல ஏக்கர்கள் பரப்பளவிலே புளியங் கன்றுகளும், மற்றும் பல மரங்களும் தற்போது நடப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இப்படிப் பரா மரிக்கப்படும் அந்த மரங்களினால் என்ன வருமானம் அரசுக்கு வருகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் அங்கே கன்று கள் நடப்பட்டிருக்கின்றன என்று பதில் சொல்லியிருக்கிறேன். கன்றுகளில் இருந்து எப்படி வருமானம் வரும் என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிந்திருப்பார்கள்.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அந்தப் பகுதியில் உள்ள காட்டில் இயற்கை யாகவே புளிய மரங்கள் இருந்திருக்கின்றன. இப்போது அவை கள் வெட்டப்பட்டு, அழித்து புதிதாகக் கன்றுகள் நடப்பட்டிருப் பதால், இத்தகைய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்பது அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அங்கே மரங்கள் இருந்து அவைகள் அழிக்கப்பட்டதாகத் தகவல் இல்லை. முட் புதர்களாக இருந்த பகுதிகள் ஆகியவற்றை அழித்து விட்டு, மரங்கள் வளர்க்கும் காடுகளாக மாற்றப்படுகிறது என்ற தகவல் தான் இங்கே இருக்கிறது.

கீரிப்பாறை இரப்பர் தோட்டத்தில் ஷெல்ஸ்கிராப்ஸ் விற்பனை.

*வினா எண். 265 —**திரு. டி. மணி** : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :

(அ) குமரி மாவட்டத்தில் அரசு ரப்பர் தோட்டத்தில் கீரிப் பாறையில் இருக்கும் பாக்டரியில் ஷெல்லும் ஸ்கிராப்ஸூம் (Shells and Scraps) உலர வைக்காமல் ஏலம் போடுவதால் அரசுக்கு ஏற்படும் நஷ்டம் குறித்துப் புகார்கள் ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

[1981 பிப்ரவரி 10

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) அவ்விதம் புகார்கள் ஏதும் வரவில்லை. அத்தகைய புகார்கள் வருவதற்கு வழியில்லை. ஏனெனில், ஷெல்ஸ்கிராப்ஸ் மீது நீர் தெளிக்கப்பட்டு அவை உலர வைக்கப்படாமல் ஈரமாகத்தான் விற்கப்பட வேண்டும். இல்லையெனில், ஸ்கிராப்ஸ் உலர்ந்து நிறம் மாறி, நிலை கெட்டு க்ரிப் அரைவைக்கு (Crepe Milling) பயனற்றதாகிவிடும்.

(ஆ) கேள்வி எழவில்லை.

திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஷெல் உலர வைக்காமல் கொடுப்பது தான் சரியென்று பதில் கூறினார்கள். ஆனால், கடந்த 2 மாதங்களுக்கு முன்னால் அந்த பாக்டரியில் பச்சை ஷெல்லும், ஸ்கிராப்புமாக ஆக்ஷன் பண்ணியிருக்கிறார்கள். குமரி மாவட்டத்தில் அந்த பாக்டரியிலே ஷெல்லும், ஸ்கிராப்பும், அங்கே உலர வைத்து, காய வைத்து கிரீப் ஆக விற்பதால் கிலோ ஒன்று ரூ. 9 முதல் 12 வரைக்கும் விற்பனையாகிறது. ஆனால், அதை பச்சையாகவே விற்றால், ரூ. 5 முதல் 6 தான் கிடைக்கின்றது. ஆகவே, க்ரீப் ஆக ஆக்கி விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட நிலைமை சமீபத்திலே 2 மாதங்களுக்கு முன்னால் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், இந்தக் கேள்வி கடந்த ஆண்டில் போடப்பட்டு, விடை தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, சமீபத்தில் அப்படி நடைபெற்றதா என்பதைப் பற்றி விபரம் அறிந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்த கேள்வி, நாமே இப்படி இந்த ரப்பரை மாற்றி விற்கலாமா என்று கேட்டிருக்கிறார்கள். அதைப் பற்றி இந்த ரப்பர் பிளான்டேஷன் அதிகாரிகளோடு கலந்து பேசி, இயலுமானால் அந்த முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளும்.

திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாக்டரியிலே ஏற்கனவே உலர வைப்பதால், காய வைப்பதால் அதன் நிறம் மாறுகின்றது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், தண்ணீர் தெளிக்கப்பட்டு விற்கப்படுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். தனியாருக்குச் சொந்தமான, அரசுக்குச் சொந்தமான பாக்டரிகளிலே எல்லாம், அதைக் காய வைத்தால்தான் நல்ல நிறமாக இருக்கும் என்று சொல்லப்படு

1981 பிப்ரவரி 10]

கிறது. தனியார் துறையிலே கூடுதல் விலைக்கு விற்கப்படுகிறது, அதே போல் காய வைப்பதற்கு, உலர வைப்பதற்குப் போதுமான இடங்கள் இருந்தும், போதுமான தொழிலாளர்கள் இருந்தும், கிறீப்பாக மாற்றுவதற்கு எந்திரங்கள் இருந்தும்கூட அப்படிச் செய்யப்படாததால் பல இலட்சக்கணக்கான ரூபாய் இழப்பு ஏற்பட்டிருந்த காரணத்தினால், அதற்குக் காரணமாக இருந்தவர்கள்மேல் இது பற்றி விசாரணை நடத்தி, இனியாகிலும், ஷெல் ஸ்கிராப்பை அரைத்து கிறீப்பாக மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உலர வைக்காமல் விற்பதால் அரசுக்கு ஏற்படும் நஷ்டம் பற்றிக் கேட்டார்கள். அப்படி உலர வைக்காமல் விற்பதில்லை என்கின்ற பதில் இங்கே தரப்பட்டிருக்கின்றது. இப்போது புதிய கருத்து ஒன்றினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தருகிறார்கள். அது உலர வைத்து விற்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் முன்னால் கேட்ட கேள்விக்கும், இப்போது தெரிவிக்கின்ற கருத்துக்கும் மாறுபாடு இருக்கின்றது. எனவே, உலர வைப்பது சிறந்ததா அல்லது உலர வைக்காமல் விற்பது சிறந்ததா என்பதைப் பற்றித் தொழில் நுட்ப அடிப்படையிலே இது இருக்கின்ற காரணத்தினாலே, இந்தத் துறை அதிகாரிகளோடு அரசு பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கும்.

[முற்பகல் 9-30]

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : இந்த மாதிரி ஏலம் போட்டு விற்பதன் காரணமாக வியாபாரிகளுக்குள்ளே கூட்டுச் சேர்ந்து, அதிகமான விலை கிடைக்காமல் செய்து விடுகிறார்கள். தனியார் துறையில் இருக்கக் கூடியவர்கள் மார்க்கெட்டில் அந்தந்த நேரத்தில் அதிகமான விலை கிடைக்கக் கூடிய முறையில் விற்கிறார்கள். அரசினுடைய துறை இதைப் பராமரிக்கும் காரணத்தால் இந்தக் குறைபாடு ஏற்படுகிறது என்பதால் அதை ஒரு கார்ப்பரேஷனாக அமைத்து அரசு ரப்பர் தோட்டங்களை கார்ப்பரேஷன் கீழ் கொண்டு வந்து அந்தந்த நேரத்தில் மார்க்கட் விலை அடிப்படையில் முடிவுகளை எடுத்து அதிகமான விலை அந்தப் பொருள்களுக்குக் கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் ; தனியாருடைய விற்பனை முறைகளுக்கும் அரசினுடைய நிறுவனங்களின் விற்பனை முறைகளுக்கும் வேறுபாடு உண்டு. தனியார் அவர்கள் விரும்புகிறபடி எந்த நேரத்திலும் எந்த முறையைக் கையாண்டும் விற்பனை செய்யலாம். அவர்களைக் கேட்க மேலே யாரும் கிடையாது. அரசுத் துறையில் பொதுவான சில நிர்ணயங்கள்,

முறைகள் வகுக்கப்படுகின்றன. அதையொட்டித்தான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பொது ஏலம் என்று சொல்லி விற்கும் போது இதிலே குறைகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லி ஏன் இதிலே டெண்டர் கொடுக்கக் கூடாது என்பார்கள். டெண்டர் கேட்டு விலை குறைந்து விட்டால் ஏன் பொது ஏலம் வைக்கக் கூடாது என்பார்கள். ஏதாவது ஒரு முறையைத்தான் அரசாங்கம் நடைமுறையாக வைத்துக் கொள்ள முடியும். அரசுத் துறையாக இருந்தாலும் அரசாங்கத்தின் விதி முறைகளைத்தான் கடை பிடிக்க வேண்டும். கார்ப்பரேஷனாக இருந்தாலும் அரசு விதிக்கின்ற விதிமுறைகளுக்கு உட்பட்டுத்தான் நடக்க வேண்டும். ஆகவே, நடைமுறையில் மாறுதல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், அரசாங்கம் இப்படி பொது ஏலத்தில் விற்கக் கூடிய விலைக்கும் தனியார் விலைக்கும் அதிக வேறுபாடுகள் இருக்குமானால் அது பற்றி அரசு பரிசீலித்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

பீடி இலை மரங்கள் உற்பத்தி

*வினா எண் 266—திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பீடி இலை மரங்கள் தமிழகத்தில் எந்தெந்த பகுதிகளில் இருக்கிறது ?

(ஆ) பீடி இலை மரங்களை மலைப் பகுதிகளிலும் காட்டுப் பகுதிகளிலும் பெருக்குகிற திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள முண்டந்துறை குன்றுகள் மற்றும் ஆந்திரா எல்லை ஓரமாக செங்கல்பட்டு மாவட்டத்திலும் அங்குமிங்குமாக பீடி இலை மரங்கள் சில காணப்படுகின்றன.

(ஆ) இல்லை.

திரு. தி. அன்பழகன் : தமிழகத்தில் பல லட்சக் கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்யக் கூடிய அளவுக்கு குடிசைத் தொழிலாக அமைந்திருப்பது பீடித் தொழில். இதற்கு அடிப்படைத் தேவை பீடி இலைகள். இந்தத் தொழில் நசித்து விடாமல் இருக்கும் அளவுக்கும் ஊக்கப்படுத்தும் அளவுக்கும் தமிழகத்தில் மலைப் பகுதிகளில் அந்த மரங்களை சிறப்பாக அமைத்து செயல் படுத்த அரசு முன் வருமா ?